பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 03 2024 **SATURDAY** 7 15 **AM**

<u>வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- பாரத் ரத்னா விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கவுள்ளார்.
- சட்டத்தின் ஆட்சி குறித்து எந்த நாடும் இந்தியாவுக்கு பாடம் கற்றுத்தரத் தேவையில்லை என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.
- மக்களவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படவுள்ளது..
- மியாமி ஓபன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இன்று பங்கேற்கிறது.

**>>>>><<<<<**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்துவதற்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மைக்ரோசாப்ட் நிறுவனர் திரு. பில்கேட்ஸுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் **Deep fake** தொழில்நுட்பத்தை பயன்படுத்தி யார் வேண்டுமானாலும், தவறான கருத்துக்களை பரப்ப முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இம்மாதிரியான தவறான அணுகுமுறைகளை தவிர்க்கும் விதத்தில் கட்டுப்பாடுகள் அவசியம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

டிஜிட்டல் கட்டமைப்பு வசதிகளை தமது அரசு மேம்படுத்தி வருவதாகவும், அதற்கான தேவை அதிகரித்துள்ளதால் இந்த வசதியை அனைத்து கிராமங்களுக்கும் அரசு விரிவுபடுத்தி வருவதாவும் பிரதமர் கூறினார்.

பின்னர் பேசிய திரு. பில்கேட்ஸ், தொழில்நுட்ப திறனில் இந்தியா சிறந்து விளங்கி வருவதாகவும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் முன்னணியில் இருப்பது பாராட்டத்தக்கது என்றும் தெரிவித்தார்.

>>>>><<<<<

பாரத் ரத்னா விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கவுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று காலை நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் முன்னாள் பிரதமர்கள் சரண்சிங், பி.வி. நரசிம்மராவ், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர், பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோருக்கு மறைவுக்கு பிந்தைய பாரத் ரத்னா விருது வழங்கப்படுகிறது.

முன்னாள் துணைப் பிரதமர் திரு. எல்.கே. அத்வானிக்கும் நாட்டின் மிக உயரிய பாரத் ரத்னா விருதினை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வழங்கவுள்ளார்.

>>>>><<<<<

சட்டத்தின் ஆட்சி குறித்து எந்த நாடும் இந்தியாவுக்கு பாடம் கற்றுத்தரத் தேவையில்லை என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்திய பொது நிர்வாக நிறுவனத்தின் 70வது அமைப்பு தின விழாவில் உரையாற்றிய அவர், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது புதிய நெறிமுறை என்றும், சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் என்று தங்களை நினைத்துக் கொள்பவர்களை சட்டம் பொறுப்பேற்க வைக்கிறது என்றும் தெரிவித்தார்.

சட்டம் தன் கடமையை செய்யத் தொடங்கியவுடனேயே, அதற்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பதோடு, மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்திய நீதித்துறை வலுவானது என்றும், மக்கள் சார்பானது என்றும், சுயேச்சையாக இயங்கக்கூடியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக அளவில் இந்தியாவின் எழுச்சியை சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் பொருளாதாரம் மற்றும் ஜனநாயகத்தின் செயல்பாடுகளால் உலகின் முக்கிய பிரச்சினைகளில் தலையிட்டு முடிவெடுக்கும் இடத்தில் இந்தியா இருக்க வேண்டும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படவுள்ளது.

நாடுமுழுவதும் மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும், புதுச்சேரியிலும் அடுத்த மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து, மனுக்களை திரும்பப் பெற இன்று மாலை ஐந்து மணிவரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிடவுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியலும் இன்று மாலை வெளியாகவுள்ளது.

ஆந்திராவில் 25 மக்களவைத் தொகுதிகள், அஸ்ஸாமில் 5 மக்களவைத் தொகுதிகள், பீகாரில் 4 மக்களவைத் தொகுதிகள், அருணாசலப்பிரதேசத்தில் இரண்டு மக்களவைத் தொகுதிகள், சத்திஷ்கர், சண்டிகரில் தலா ஒரு மக்களவைத் தொகுதிகளிலும் இறுதி வேட்பாளர் பட்டியில இன்று மாலை வெளியிடப்படவுள்ளது.

>>>>><<<<<

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள் 30 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வேலையின்மையை போக்குவதற்கு காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் தெளிவான திட்டம் தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது நகர்ப்புறம், கிராமப்புறம் என 83 சதவீத இளைஞர்கள், வேலையின்றி தவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தேர்தல் ஆணையம் பாரபட்சமாக செயல்படுவதாக திமுக பொதுச்செயலாளர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் நடைபெறும் நேரத்தில் காங்கிரஸ் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளதில் உள்நோக்கம் இருப்பதாக கூறினார்.

பிஜேபி தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு அவர்கள் விரும்பும் சின்னம் ஒதுக்கப்படுவதாகவும், எதிர்க்கட்சிகள் ஏற்கனவே பயன்படுத்தி வந்த சின்னத்தைக்கூட ஒதுக்க தேர்தல் ஆணையம் மறுப்பதாகவும் அவர் குறை கூறினார்.

>>>>><<<<<

2024 மக்களவைத் தேர்தல் முற்றிலும் மாறுபட்ட தேர்தல் என்றும், நாட்டிலேயே முதல்முறையாக தேர்தலில் வாக்களிப்பதற்கு முன்பு யார் பிரதமர் என்பதை தீர்மானித்த தேர்தல் என்றும் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை, திருவொற்றியூரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சமூகநீதியை பாதுகாக்கும் வகையில் பிஜேபி செயல்பட்டு வருவதாக கூறினார்.

மழை மற்றும் வெள்ளத்தில் தத்தளிக்கக்கூடிய பகுதியாக சென்னை உள்ளது என்றும், மழைக்காலங்களில் மக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை திமுக அரசு எடுக்கவில்லை என்றும் திரு. அண்ணாமலை குறை கூறினார்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

ஜனநாயகத்தை கட்டமைக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது உணர்ச்சிபூர்வமானது என்று தேனியைச் சேர்ந்த மாணவிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவி 40 செகண்ட்* )

>>>>><<<<<

பெங்களூரு ரமேஸ்வரம் கஃபே-யில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் தேடப்பட்டு வரும் குற்றவாளிகளை பற்றிய தகவல் தெரிவிப்பவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று தேசிய தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் அப்துல் மதின் அஹமது தாஹா, முஸாவிர் உசைன் சாஹிப் ஆகியோர் குறித்து தகவல்கள் அளிக்க விரும்புபவர்கள் **info.blr.nia@gov.in** என்ற மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான செனகலில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. **Bassirou Diomaye Faye** வெற்றி பெற்றதை அந்நாட்டு அரசியல் அமைப்பு கவுன்சில் உறுதிப்படுத்தியுள்ளது.

இதையடுத்து அவர், அந்நாட்டின் 5-வது அதிபராக அடுத்த மாதம் 2ஆம் தேதி பதவியேற்றவுள்ளார்.

வாக்குச்சாவடிகளில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்ட தற்காலிக முடிவுகளை அந்நாட்டு உச்சநீதிமன்றம் சரிபார்த்து, உறுதி செய்துள்ளது.

இந்த தேர்தலில் திரு. **Bassirou Diomaye Faye** –வுக்கு 54 புள்ளி இரண்டு எட்டு சதவீத வாக்குகளும், ஆளும் கூட்டணியின் வேட்பாளரான முன்னாள் பிரதமர் திரு. **Amadou Ba** –வுக்கு 35 புள்ளி ஏழு ஒன்பது சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மியாமி ஓபன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இன்று அமெரிக்காவின் **Austin Krajicek** – குரேஷியாவின் இவான் டோடிக் இணையை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்தது.

விராட் கோலி சிறப்பாக விளையாடி 59 பந்துகளில் 83 ரன் எடுத்தார்.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கொல்கத்தா அணி 16 புள்ளி ஐந்து ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 186 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

லக்னோவில் இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – லக்னோ அணியை எதிர்த்து விளையாடவுள்ளது.

>>>>><<<<<

மேட்ரிட்டில் நடைபெற்று வரும் ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சிக்கி ரெட்டி – சுமித் ரெட்டி இணை இன்று இந்தோனேஷியாவின் **Rinov Rivaldy – Mentari** இணையை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<